


குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை குறித்து

# மெட்ரோ ரெயில் பயணிகளிடம் மாணவர்கள் விழிப்புணர்வு

சென்னை, நவ.16–

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் மற்றும் இளம் இந்தியர்கள் அமைப்பு சென்னை பிரிவு சார்பில் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை, சைபர் குற்றங்கள் குறித்த விழிப்புணர்வு பிரசாரம் கோயம்பேட்டில் உள்ள மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் எதிரே நடந்தது.

இந்த விழிப்புணர்வு பிரசாரத்தில் திருவேற்காடு ஜி.சி.என்.பள்ளியை சேர்ந்த 350 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை குறித்தும், அவர்களை பாதுகாக்க வேண்டிய அவசியம் குறித்தும் அடங்கிய விழிப்புணர்வு பதாகைகளை கையில் ஏந்தியபடி கோஷங்களை எழுப்பினார்கள்.

இதனை தொடர்ந்து மாணவர்கள் கோயம்பேடு மெட்ரோ ரெயில் நிலையத்தில் இருந்து விமான நிலைய மெட்ரோ ரெயில் நிலையம் வரை ரெயிலில் பயணம் செய்து பயணிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இதனையடுத்து ஷெனாய் நகர் மெட்ரோ ரெயில் நிலையத்தில் நடந்த குழந்தைகள் தின விழாவில் மாணவர்கள் கலந்து கொண்டனர்.